# பட்டயம்

மலர் - 08 டிசம்பர் - 2011 இதழ் - 2

Date of Issue : 01-12-2011

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 2 Price Per Copy : Rs.5.00




## ஆலோசனை மலர்

BLESS US, O LORD! (HEB 6/14)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர் கடிதம்

ஆண்டவரிடம் மன்றாடி இரக்கம் கிடைக்கும் வரைக்கும் கெஞ்ச வேண்டும். அவர் இரக்கத்தை நம்பி கேட்க வேண்டும். நம் தகுதிகளை நம்பி நாம் அவரிடம் கேட்கக் கூடாது. அவரிடமிருந்து இரக்கம் பெற நமக்கு எந்தத் தகுதியும் இல்லை.

யோபு உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகினவனாயிருந்தான். சாத்தான் கர்த்தரின் அனுமதியைக் கேட்டு அவனைச் சோதித்தான். ஆண்டவர் அவனைச் சோதிக்கவில்லை. சாத்தான்தான் சோதித்தான் என்பது யோபுக்குத் தெரியவில்லை. யோபுவின் நண்பர்களுக்கும் அது புரியவில்லை. அவர்கள் அவனைக் குற்றம் பிடித்தார்கள். அவர்கள் குற்றம் பிடிக்க கூடிய அளவுக்கு அப்படிபட்டவனும் அல்ல. நோயின் அகோரத்தினால் புலம்பினான். அவன் தான் செய்த நல்ல காரியங்களை சொன்னபோது அவனுக்கு இரக்கம் கிடைக்கவில்லை. சர்வ வல்லவர் இயேசு. அவரோடு நாம் வழக்காட முடியாது. ஏன்? எதற்கு? என நாம் அவரிடம் குற்றம் பிடிக்க முடியாது. அவர் நம்மிடம் குற்றம் பிடித்தால் நாம் அவர் பக்கத்திலே நிற்க முடியாது. நோய் வந்தாலோ, தீமை வந்தாலோ நாம் ஆண்டவரிடம் எதிர்த்து நிற்க முடியாது. பாவத்தைக் குறித்து மனம் வருந்தி, அறிக்கை பண்ணி, மன்றாடி, கெஞ்சி, காத்திருந்து ஜெபிக்கும் போது அவர் இரக்கம் கிடைக்கும். மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அவர் நல்லவர், வல்லவர், போதுமானவர் என்பதை நம்பி எந்த தீமைகள் வந்தாலும் அவரிடம் மன்றாடுங்கள்.

யோபு பூரண வயதுள்ளவனாய் நல்ல சரீர சுகத்தோடு, 4 தலைமுறைகளாக பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டான் (யோபு 42/17, 18). ஆகவே அவர் இரக்கம் கிடைக்கும் வரைக்கும் கெஞ்சி மன்றாட வேண்டும். சில சமயங்களில் இரக்கம் முந்தி கிடைக்கும். சில சமயங்களில் இரக்கம் பிந்தி கிடைக்கும். இரக்கம் கிடைக்கப் பிந்தினால் சோர்ந்து போகக் கூடாது. சூழ்நிலைகளைப் பார்த்து பயப்படக் கூடாது. மருத்துவர்காளல் கைவிடப்பட்ட வியாதி வந்தாலும் அவர் இரக்கத்தை நம்பி ஜெபித்தால் நிச்சயம் விடுதலை கிடைக்கும். ஜீவன் மருத்துவர் கையிலோ, சாத்தான் கையிரோலா, வியாதியின் கையிலோ இல்லை. ஜீவன் கர்த்தர் கையில் இருக்கிறது. எப்போதும் அவர் இரக்கத்திற்காக கெஞ்சும் போது தீமை நம்மை மேற்கொள்ள முடியாது. ஜீவனை பார்க்கிலும் அவர் இரக்கம் பெரியது. கர்த்தர் தாமே உங்களை அவர் இரக்ககத்திற்காக தினமும் காத்திருக்கும் பிள்ளைகளாக மாற்றி ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

1. நன்மையே செய். தீமையே செய்யாதே. மேன்மையடைவாய் - ரோமர் 12 /21

2. நன்மைக்கு நன்மை செய் - I தீ 5 / 4

3. தீமைக்கும் நன்மையே செய் - மத் 5 / 44

4. நன்மைகள் மேல் நன்மை செய். பரலோகிலும் உனக்கு பலன் உண்டு - மத் 5 / 16

5. முதலாவது கடவுளுக்கு முக்கியத்துவம் கொடு. இரண்டாவது ஆத்துமாவுக்குக் கொடு. மூன்றாவது சரீரத்துக்குக் கொடு. - மத் 6 / 33

6. துன்பம் எதனால் வந்தது என்பதை முதலாவது நிதானிக்க வேண்டும் - யாக் 1 / 14, 15

7. உலகத்தின் படிப்புகள் சரீரத்திற்கு. பைபிள் படிப்பு ஆத்துமாவிற்கு - சங் 19 / 7

8. நமக்குத் தீமை வராதபடி காக்க வேண்டும். நம்மால் பிறருக்கும் தீமை வராதபடி காக்க வேண்டும் - ரோமர் 12 / 17

9. கர்த்தருடைய வார்த்தைகளை வாசியுங்கள் ; விசுவாசியுங்கள் ; விசுவாசித்து அறிக்கை பண்ணுங்கள் ; விசுவாசித்து ஜெபியுங்கள். ஜெயம் - எசாயா 34 / 16

10. கர்த்தருக்கடுத்த காரியங்களில் புதியன செய்ய வாஞ்சியுங்கள். ஜெபியுங்கள். செய்திட கர்த்தர் உதவி செய்வார் . - யோ 15 / 2

11. பொருத்தனை செய்வதோடு நிறுத்தாமல் அப்பொருத்தனை நிறைவேற்ற உதவுமாறு ஜெபி. அப்போது நிறைவேற்ற கர்த்தர் உதவுவார். - I சாமு 1 / 10, 11 ; 2/11

12. பிறருடைய குறைகளையே பார்ப்பவர்களாக அல்ல நிறைவுகளைப் பார்க்க வேண்டும் - மத் 7 / 3-5

13. ஆண்டவர் தாவரங்கள், பறவைகள், ஊர்வன, மச்சங்கள், மிருகங்களைப் படைத்துள்ளார். எதற்காக? இவைகளைக் கண்டு படைத்தவரைப் புகழ்ந்திட - சங் 19 / 1,2

14. எந்த கருத்தாயிருந்தாலும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒத்துப் போகாவிட்டால் ஏற்றுக் கொள்ளாதே - வெளி 22 / 18, 19

15. அன்புவழி, பரிசுத்த வழி, பக்தி வழி என்ற மூன்றுமே ஆண்டவர் உலகில் மனிதனாய் வந்து மனுக்குலத்துக்குக் காட்டிய வழி. - லூக் 10 / 27

16. நாம் ஏழையாயிருப்பதற்கு சோம்பல், வீண்செலவு, ஆடம்பரம் காரணமா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் - நீதி 6 /9-11

17. சரீரத்துக்கு மட்டுமல்ல, உன் உயிருக்கும் பலமுண்டு. உன் உயிருக்கு பலம் தருபவர் இயேசு - சங் 27 /1

18. ஊற்றிலும் பெரியது ஆறு. ஆற்றிலும் பெரியது கடல். கடனும் பெரியது பூமி. பூமியை விட பெரியது யூனிவெர்ஸ். அதினும் பெரியவர் இயேசு. - மத் 12 /6

19. இயேசுகிறிஸ்து பரிதி இல்லாத பெரிய வட்டம் போன்றவர். உலகில் உள்ள எல்லாம் அவ்வட்டத்தின் மையம். அவர் எதையும் கண்காணிக்க முடியும். - யோ 4 /24.

20. நல்லாலோசனைகள் எங்கிருந்து வந்தாலும் கர்த்தருக்கடுத்தவைகளானால் ஏற்றுக் கொள். - நீதி 19 /20.

21. வெறும் அறிவினால் ஒருவன் ஆண்டவரை நெருங்க முடியாது. அன்பு, பக்தி, பரிசுத்தம் இல்லாமல் நெருங்க முடியாது - எபி 12 /14

22. உடைந்த மண்பானை மறுபடியும் களிமண்ணாவதில்லை. அதைப் போல சிலர் எவ்வளவு வசனம் கேட்டாலும் திருந்துவதுமில்லை. - II தீ 3 /7

23. காற்று நல்ல வாசனையும் கொண்டு வரும். கெட்ட வாசனையும் கொண்டு வரும். அப்படியே சிலர் நன்மையும் செய்வார்கள். பாவமும் செய்வார்கள். - I யோ 4 / 1

24. ஸ்தோத்திரம், துதி, வணக்கம், ஆராதனை, ஜெபம், உபவாசம், வேத தியானம், சித்தம் செய்தல், தேவனை மகிமைப்படுத்தல் யாவும் வேண்டும் - ரோமர் 10 / 13

25. நீயும் இரக்கமுள்ளவனாயிருந்தால் கடவுளின் கிருபையைப் பெறுவாய் - மத் 5 / 7

26. வேலைக்கேற்ற கூலி, வேலை செய்தவுடன் கூலி கொடுக்கத் தெரிந்த எஜமானாக இருக்க வேண்டும் - யாக் 5 /4

27. பாவம் பெருகப் பெருக வியாதிகளும் பெருகும் - ரோமர் 6 /23

28. பலருக்கு கேளிக்கையே கடவுள். சிலருக்கு இயேசுவே கடவுள்.
- கலா 5 /21

29. தேவைக்கும் மிஞ்சி ஆசைப்படக்கூடாது. அதுவே பேராசை.
- எபி 13 / 5

30. பிறருக்குரியதை அபகரிக்க எண்ணுவது தவறு. அதுவே இச்சை
- தீத்து 1 /7

31. கடவுள் இல்லாத இடமில்லை. அவருக்குக் கீழ்படிந்தால் அவர் ஆளுகைக்குள் வருவாய் - மத் 2 /6

32. தண்ணீர், அப்பம் புசிக்கும் முன்னர் ஸ்தோத்தரிக்க வேண்டும்
- I தீ 4 / 44

33. கடமைகளைச் செய்யாமருந்து கொண்டு உரிமைகளுக்கு மட்டும் போராடுவது என்பது தவறு - லூக் 17 / 10

34. பெற்றோருக்கு அடுத்த கடமை, பிள்ளைகளுக்கு அடுத்த கடமை, புருஷனுக்கடுத்த கடமை, மனைவிக்கடுத்த கடமைகளில் தவறக்கூடாது - எபே 5 / 22, 28

35. மக்களுக்கடுத்த கடமை, மக்களை ஆள்பவர்களுக்கடுத்த கடமைகளில் தவறக்கூடாது - எபே 6 /5-9

36. பெண்கள் மத்தியில் எழுப்புதல் வந்தால் பிள்ளைகள் மத்தியிலும் புருஷர் மத்தியிலும் எழுப்புதல் வர வாய்ப்புண்டு - நியா 5 /7

37. உலகம் போகிற போக்கில் போவது அறிவல்ல. கர்த்தரின் வார்த்தையின்படி போவதே அறிவு - கொலோ 1 / 9,10

38. கர்த்தருக்கு மாத்திரம் அடிமையாய் இருப்பதே மெய்யான சுதந்திரம்
- லூக் 1 /38

39. மனிதனை மனிதனாக மதிக்கத் தெரியாதவன் கற்றவனாயிருந்தும் கல்லாதவனே! - லூக் 6 /31

40. வாங்க முடியாதவைகள் திருப்தி, இளைப்பாறுதல், நிம்மதி, ஆரோக்கியம், நித்திரை, திறமைகள், வரங்கள், வல்லமைகள். தருவார் இயேசு - மத் 11 /28

41. கடமைகளையும் செய்ய வேண்டும். இதயம், எண்ணம் யாவும் கர்த்தரிடம் வைக்கவும் வேண்டும் - ஆதி 2 /15

42. கர்த்தர் நமக்குக் கொடுத்ததற்குள் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வீண் செலவு, கடன் வாங்கல்களில் சிக்கக் கூடாது - லூக் 15 / 14

43. தான் மட்டும் வாழ வேண்டும் என்றிராமல் தரணியும் வாழ வேண்டும் என்ற தாகம் வேண்டும் - மத் 22 / 39

44. எதையும் குறித்த நேரத்திற்கு முந்தியே செய்துவிட்டால் அது விடுபட்டுப் போவதோ, பிந்தி விடுவதோ இல்லை - எபே 5 / 16

45. இழந்த பணத்தைத் திரும்ப சம்பாதித்து விடலாம். இழந்த நேரத்தைத் திரும்பப் பெற முடியாது - சங் 31 / 15, I கொ 7 / 29

46. திருப்தியை ஆண்டவர் தான் மனிதனுக்குக் கொடுக்க முடியும். நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்க்கே அதைக் கொடுக்கின்றார் - மத் 5 / 6

47. ஆவியின் கனிகள் உடையவர்களாய் இருப்பது கர்த்தரின் பார்வையில் செல்வத்தைப் பார்க்கிலும் சிறப்பு - கலா 5 / 22,23

48. வீண்செலவு செய்யாதவன் அதைக் கொண்டு இன்னும் அநேக நன்மைகள் செய்ய முடியும் - யாக் 4 / 4

49. பாவத்தைத் தூண்டும் புத்தகங்களுக்கும், இடங்களுக்கும், பொருள்களுக்கும், நபர்களுக்கும், பழக்கங்களுக்கும் இடம் கொடாதே - ஆதி 39 / 9-12

50. தேவனோடு ஐக்கியமாயிரு. தேவ பிள்ளைகளோடு ஐக்கியமாயிரு. - I யோ 1 / 3,7

51. செடி போல தகப்பனும், கொடி போல தாயும், மலர்கள் போல பிள்ளைகளும் காணப்பட வேண்டும் - பிரசங்கி 4 / 12

52. கோபத்திற்கு இடம் கொடுத்தால் தேவபிரசன்னம் நம்மை விட்டு எடுபட்டுப் போகும் - யாக் 1 / 20

53. ஆவியாயிருக்கிற கடவுளின் ஒரே அவதாரம் கன்னிமைந்தனாய் வந்த ஆண்டவராம் இயேசு - ஏசாயா 7 / 14

54. தரித்திரங்கள் வந்தாலும், சூழ்நிலைகள் மாறினாலும் ஆத்துமா பாவத்தில் விழாதபடி காத்துக் கொள்ள வேண்டும் - நீதி 30 / 9

55. உடலுக்கு உணவு ஆகாரம். ஆத்மாவுக்கு உணவு தேவ ஆலோசனை. ஆவிக்கு உணவு ஆண்டவர் - மத் 4 / 4

56. பொருளாசை என்ற பாவத்தில் இருப்பவன் பொருளுக்காக எந்த பாவமும் செய்யத் துணிந்து விடுவான் - நீதி 1 / 19

57. நாம் செய்கிற எந்த காரியத்தாலும் நமது நலன், சமுதாய நலன், சந்ததி நலன் கெடாதபடி இருக்க வேண்டும் - மத் 22 / 39

58. உடையில் எளிமை, உணவில் எளிமை, ஆவியில் எளிமை உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும் - மத் 5 / 3

59. புழுவால் மறைக்கப்பட்ட தூண்டிலைப் போல் சாத்தான் தந்திரமாக உட்புகுந்திட வருவான் - ஆதி 3 / 1

60. நன்மை எது, தீமை எது என்று நமக்குள்ளே உணர்த்துவதே நம் ஆவி என்றும், மனசாட்சி என்றும், பகுத்தறிவு என்றும் உள் வெளிச்சம் என்றும் சொல்லப்படுவதாகும் - நீதி 20 / 27

61. ஆண்டவர் மனிதனுக்கு மாத்திரம் பகுத்தறிவு தந்துள்ளார். அதையும் மீறியே பாவம் செய்கிறான் - எபி 5 / 14

62. ஆண்டவர் மனிதனுக்கு மனசாட்சியைக் கொடுத்துள்ளார். அதையும் மீறியே பாவம் செய்கிறான் - ரோமர் 2 / 15

63. ஆண்டவர் மனிதனுக்கு ஆவி என்னும் வெளிச்சம் தந்துள்ளார். அதையும் மீறி பாவம் செய்யும் போது அந்த ஆவி இருளடைகிறது - நீதி 20 / 27

64. ஆண்டவர் மனிதனைப் பல வழிகளில் எச்சரிக்கின்றார். அதையும் மீறியே பாவம் செய்கிறான் - சங் 19 / 11

65. ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருங்கள். ஆனால் இச்சைக்கோ, அசுத்தத்திற்கோ இடம் கொடாதிருங்கள் - யோ 13 / 35

66. கானல் நீரைப் போன்றதும், வெயில் மின்னும் கிளிஞ்சல் போன்றதும் மாயையானது இவ்வுலகம். மாயையில்லாதவர் இயேசு ஒருவரே! - பிர 1 / 1

67. மனுக்குலத்தை கர்த்தர் இயேசு நேசிக்கிறார். மனுக்குலத்தை நீ நேசிக்கிறாயா என்பதே அவர் நம்மிடம் கேட்கும் கேள்வி - I யோ 4 / 11

68. கோப உணர்ச்சி, காம உணர்ச்சி, பொறாமை உணர்ச்சி, பெருமை உணர்ச்சி, பகை உணர்ச்சி - இவைகளுக்கு இடம் கொடாதே - I இரா 3 / 12

69. நம்முடைய ஆலயங்களும் சுத்தமாயிருக்க வேண்டும். நம் ஜீவ ஆலயங்களும் சுத்தமாயிருக்க வேண்டும் - I கொரி 3 / 16,17

70. உடல் சுத்தம், உடையில் சுத்தம், உணவில் சுத்தம், இருப்பிடத்தில் சுத்தம், இதயத்தில் சுத்தம் வேண்டும் - மத் 5 / 8

71. குழந்தைகளை நல்வழியில் வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும், ஆசிரியருக்கும், போதகருக்கும் உண்டு - நீதி 22 / 6

72. நன்மை செய்யும் இடத்தை தீமை செய்யும் இடமாக மாற்றக் கூடாது - யாத் 3 / 5

73. ஆராதனை ஸ்தலத்தை வேறு ஸ்தலமாக மாற்றக் கூடாது - யோவான் 2 / 16

74. மனந்திரும்பி ஆண்டவரைத் துணையாக்கிக் கொள்பவன் எதைக் கண்டும் பயப்படுவதில்லை - சங் 46 / 1-3

75. செய்யத்தக்கக் காரியத்தை, செய்யத்தக்க இடத்தில், செய்யத்தக்க விதத்தில், செய்யத்தக்க நேரத்தில் செய்வதே விவேகம் - நீதி 1 / 3

76. வேகமும் வேண்டும். விவேகமும் வேண்டும் - பிர 9 / 11

77. மனிதர்களைப் படைத்தவர் ஆண்டவர் இயேசு. ஜாதிகளைப் படைத்தவன் மனிதன் - அப் 17 / 26

78. மனிதப்பற்று வேண்டும். ஜாதிப்பற்று வேண்டாம் - I யோ 5 / 1

79. அவரவர் ஆத்துமாவை அவரவர்தான் பாவத்துக்கு விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும் - I யோ 5 / 18

80. கூடுமானவரை யாருக்கும் பாரமாய் இராதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டும் - I தெச 2 / 9

81. ஒரு பெண்ணுக்கு மனைவியாகும் நிலை, பிள்ளையைச் சுமக்கும் நிலை, பிள்ளையைப் பெறும் நிலை, பிள்ளையைப் போஷிக்கும் நிலை, பிள்ளையைப் பராமரிக்கும் நிலை, தாயாய் அரவணைக்கும் நிலைகள், வீட்டைக் காக்கும் நிலை உண்டு. - நீதி 31 / 10

82. பசி, ருசி, திருப்தி, நிறைவு, சந்தோஷம் தருவார் இயேசு - மத் 5 / 6

83. அதிகாரத்தில் இருப்பவர்கள் அதைத் தவறாக பயன்படுத்துவது பெரிய பாவம் - எபே 6 / 9

84. மருத்துவத்தொழில் செய்பவர்கள் அதைத் தவறாக பயன்படுத்துவது பெரிய பாவம் - எபே 6 / 9

85. பிள்ளைகள் பெற்றோர்களுக்கு விரோதமாய் பாவம் செய்வது பெரிய பாவம் - எபே 6 / 1

86. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு விரோதமாய் பாவம் செய்வது பெரிய பாவம் - எபி 13 / 17

87. கடவுளுக்கு விரோதமாகக் பாவம் செய்வது பாவங்களில் எல்லாம் பெரிய பாவம் - மத் 12 / 31,32

88. வாஞ்சை, தியாகம், அர்ப்பணம், பிரயாசம், உழைப்பு, கவனம், ஜெபம் என்றும் ஏழும் முன்னேற்றத்திற்குத் தேவையானவைகள் - சங் 42 / 1

89. அன்பு, பண்பு, பரிசுத்தம், பிரயாசம், தேவபக்தி, போதுமென்ற மனம், ஜெபம் என்ற ஏழும் வேண்டும் - மத் 5 / 8, I தீ 6 / 6

90. அதிருஷ்டம் மேல் நம்பிக்கை வைக்காதிருங்கள். ஆண்டவர் மேலும் அவர் கிருபையின் மேலும் சார்ந்திருந்து ஜெபியுங்கள். நன்மை செய்வார். - பிர 3 / 22-26

91. பேசத்தகாததைப் பேசாதே. பேசத்தகாத இடத்தில் பேசாதே. பேசத் தகாதவர்களிடம் பேசாதே. - எபே 4 / 29

92. மனிதர்கள் புகழ்ந்தாலும் சரி, இகழந்தாலும் சரி, சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடந்திடு. - யோ 7 / 18

93. உன் கர்த்தர் விடுவித்தாலும் சரி விடுவிக்காமற் போனலும் சரி சத்தியத்தின் பாதையில் நடந்திடு. - தானி 3 / 17,18

94. உன் சொந்த ஆத்துமா உனக்கு ஆசிரியரல்ல. உன்னை உருவாக்கிய இயேசுவே உன் ஆசிரியர் - நீதி 1 / 2 ; 7/2

95. உன் இதயத்திருந்து எழும்பும் கோபம், பகை, பொறாமை, இச்சை பிறரையும் பாதிக்கும். உன்னையும் பாதிக்கும். - மாற்கு 7 / 15, 20-23

96. ஆவியில் பலம், ஆத்துமாவில் பலம், சரீரத்தில் பலம், மனதில் பலம், இதயத்தில் பலம் தருவார் இயேசு. - அப் 1 / 8

97. கண்ணடக்கம் தேவை. காணத்தகாதவைகளைக் காணாதே. - I யோ 2 / 16

98. செவியடக்கம் தேவை. கேட்கத்தகாதவைகளைக் கேளாதே - ஏசாயா 33 / 15

99. நாவடக்கம் தேவை. பேசத்தகாதவைகளைப் பேசாதே - I பேது 3 / 10

100. கையடக்கம் தேவை. செய்யத்தகாததைச் செய்யாதே - ஏசா 1 / 16

101. காலடக்கம் தேவை. போகத்தகாத இடங்களுக்குள் போகாதே - நீதி 4 / 26

102. இச்சையடக்கம் தேவை. மாம்ச இச்சைகளில் சிக்கி விடாதே - I யோ 2 / 16

103. உன் உயிரினும் உயிராய், என்றும் உயிருள்ளவரை, உன் உயிர் உள்ளவரை நேசிப்பாயாக - மத் 10 / 39

104. குறிசொல்லல், எண் ஜோசியம், அமாவாசை கணித்தல், நாள் பார்த்தல், நட்சத்திரம் பார்த்தல் யாவும் சாத்தானின் வேதம் - உபா 18 / 10-12

105. சூனியம் செய்தல், அஞ்சனம் பார்த்தல், மாயவித்தை, மந்திரவாதம், கைரேகையினைப் பார்த்தல், விக்கிரகாராதனை, தீக்கடக்கப் பண்ணல் யாவும் சாத்தானின் வேதம் - உபா 18 / 10-12

106. பரிசுத்தர் இயேசுவே! பரிசுத்தம் செய்பவர் இயேசுவே! பரிசுத்தம் வயுறுத்தியவரும் இயேசுவே! - எபி 2 / 11

107. உன்னால் முடியாதவைகளுக்கு மாத்திரம் பிறருடைய உதவியை நாடு - மத் 20 / 28

108. மனந்திரும்பாத கூட்டத்தின் வமையைவிட மனந்திரும்பிய கூட்டத்தின் வமை பெரியது - II இரா 6 / 16

109. பிறருக்கு இரக்கம் பாராட்டு. பிறரை மன்னித்துவிடு, பிறரிடத்தில் பொறுமையாயிரு - மத் 18 / 35

110. அமைதி, அடக்கம், கற்பு ஆகியவைகள் பெண்ணிடத்தில் கர்த்தர் விரும்புபவைகள் - I பேதுரு 3 / 1,4

111. கடவுளை உன் வாழ்க்கையால் மகிமைப்படுத்து ; அதுவே உன் இலட்சியமாக இருக்கட்டும் - மத் 5 / 16

112. நல்ல நண்பர்கள், நல்ல உற்றார், நல்ல ஐக்கியம், நல்ல சபை ஆண்டவரிடத்தில் கேள் - சங் 133

113. ஒழுக்கத்தை மீறி பெறப்படும் இன்பம் பாவமே - நீதி 23 / 31

114. சோம்பலாயிருந்து பெறுகின்ற இன்பம் பாவமே - நீதி 6 / 6

115. பிற உயிர்களையும், மனிதர்களையும் துன்புறுத்திப் பெறுகின்ற இன்பம் பாவமே - யோனா 4 / 11

116. விலங்கு கணக்கு கொடுக்க வேண்டாம். மனிதனோ கணக்கு கொடுக்க வேண்டும் - ரோமர் 14 / 12

117. பிழைப்பதற்கேற்ற அறிவு, நன்மை செய்வதற்கேற்ற அறிவு, நித்யம் அடைவதற்கேற்ற அறிவு தேவை - நீதி 1 / 4

118. வேத வசனத்தை வாசிக்க வேண்டும் ; தியானிக்க வேண்டும் ; ஆராய்ந்து பார்க்க வேண்டும் - யோ 5 / 39

119. தேவபிள்ளைகளின் சந்தோஷத்திலும் பங்கெடுங்கள் ; தேவபிள்ளைகளின் துக்கத்திலும் பங்கெடுங்கள் - கலா 6 / 2

120. நம்முடைய தவறுகள், பாவங்கள், அக்கிரமங்கள், மீறுதல்கள், குறைகள், குற்றங்கள் யாவையும் முதலாவது ஆராய்ந்து பார்க்க வேண்டும் - மத் 7 / 5

121. முக அழகும் அழகல்ல. பணமும் அழகல்ல. நற்குணமும் நற்கிரியைகளுமே அழகு - நீதி 31 / 30

122. மெய்கடவுளாம் இயேசுவைத் தேடுவதற்கு எல்லாருக்கும் சுதந்திரம் உண்டு. தேடக்கூடாது என்று சொல்வது அட்டூழியம் - யோ 14 / 6

123. சோம்பேறி முள்ளில்லா கடிகாரம் போன்றவன். அவனைக் கொண்டு அவனுக்கும் யாருக்கும் பிரயோஜனமில்லை - நீதி 13 / 1

124. அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பதும், அஞ்சத்தகாததைக் கண்டு அஞ்சுவதும் தவறு - நீதி 1 / 7 ; சங் 34 / 4

125. நம்மையும், நம் வாழ்க்கையையும் கர்த்தரின் மகிமைக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும் - யோ 7 / 18, I கொ 10 / 31

126. நம்முடைய கடமைகள் எவைகள் என்பதைப் பற்றிய உணர்வு வராத கட்டத்தில் அந்த கடமைகளைச் செய்ய முடியாது - ஏசா 1 / 3

127. சகலமும் மாறக்கூடியதே. அழியக்கூடியதே. மாறாதவரும் அழியாதவரும் இயேசு ஒருவரே! - எபி 13 / 8

128. மனிதனிடம் பேசும் நேரத்தைவிட கர்த்தரிடம் பேசும் நேரம் அதிகமாக இருக்க வேண்டும் - ஆதி 6/ 9

129. தாயிடம் தாய்ப்பால் குடித்தவர்கள் ஆண்டவரிடம் ஞானப்பால் குடிக்க வேண்டும் - I பேதுரு 2 / 3

130. கடவுள் பரிசுத்தராயிருக்கிறபடியால் நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பது அவர் சித்தம் - I பேதுரு 1 / 15,16

131. நன்மை செய்பவர்களுக்கு நிச்சயமாக நன்மைகள் கிடைக்கும் - கலா 6 / 9

132. கோபம் என்பது பிறருக்கும் துன்பம் தரும். கோபிக்கிறவர்க்கும் துன்பம் தரும் - நீதி 27 / 4

133. ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு வாழ்க்கையாய் நினைத்து பிரயோஜனமுள்ளதாக ஆரம்பித்து முடிக்க வேண்டும்-எபே 5 / 16

134. சட்டம் ஏழைகளுக்குப் பாதகமாகவும், பணக்காரருக்கு சாதகமாகவும் இருக்கக் கூடாது - ரோமர் 13 / 1

135. நம்மை நாமே கெடுப்பதும் ஒழுக்கக்கேடே. பிறரை நாம் கெடுப்பதும் ஒழுக்கக்கேடே - I கொ 3 / 16,17

136. நம் சுயசரீரத்திற்கு விரோதமான பாவமுண்டு. பிறர் சரீரத்திற்கு விரோதமான பாவமுண்டு - I கொ 6 / 18-20

137. நம் ஆத்மாவைக் கெடுக்கக் கூடாது. பிறர் ஆத்மாவையும் கெடுக்கக் கூடாது - மத் 18 / 6,7

138. பிறருடைய சமாதானத்தைக் கெடுக்கக் கூடாது - II தெச 1 / 6

139. வீணான கவலை, வீணான பயம், வீணான துக்கம் இவைகளுக்கு இடம் கொடாதே - மத் 6 / 27-34

140. மனிதரிடம் நன்றி சொல்லப் பழகுங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லப் பழகுங்கள் - I தெச 5 / 18

141. மாமரத்தில் மாம்பழம் பழுத்துத் தொங்குகிறது. அந்தப் பழத்தை அது உண்பதில்லை. அதைப் போல் மனுக்குலத்துக்காகக் கனி கொடு - மத் 3 / 10

142. ஒரு மனிதனுக்கு அன்பே அழகு. ஒரு குடும்பத்துக்கு அன்பே அழகு. ஒரு சமுதாயத்துக்கு அன்பே அழகு. ஒரு நாட்டுக்கு அன்பே அழகு - I யோ 4 / 7-9

143. நாம் எரிகின்ற மெழுகுவர்த்தியாக இருந்தால் எரியாத மெழுகு வர்த்திகளையும் எரிய வைக்கலாம் - யோ 5 / 35

144. தவறான பார்வை, தவறான வார்த்தை, தவறான எழுத்து, தவறான எண்ணம் யாவுமே தவறு - மத் 5 / 28

145. கடந்த காலத்தில் செய்த தவறுகளை மறுபடி செய்யாதே. கடந்த காலத்தில் செய்த பாவங்களை மறுபடி செய்யாதே - யோ 5 / 14

146. ஆடம்பரத்தில் இருந்து பழகியவர்கள் அது இல்லாத கட்டம் வரும் போது மிகவும் பாதிப்படைவார்கள் - யாக் 4 / 4

147. ஐசுவரியமுள்ளவன் தர்மம் செய்வதிலும் ஐசுவரியமுள்ளவனாகக் காணப்பட வேண்டும் - I தீ 6 / 17

148. ஞானமுள்ளவன் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் ஞானமுள்ளவனாகக் காணப்பட வேண்டும் - I பேதுரு 4 / 10,11

149. நல்ல நண்பர் இயேசுவே! நல்ல புத்தகம் பைபிளே! - உன் 1 / 7

150. காலத்தைப் பிரயோஜனப்படுத்துகிறவன் வாழ்க்கையைப் பிரயோஜனப்படுத்துகிறான் - எபே 5 / 16

151. மூளையில் அறிவைச் சேர்க்க வேண்டும். இதயத்தில் அன்பை சேர்க்க வேண்டும். கைகளில் பலத்தைச் சேர்க்க வேண்டும் - நீதி 1 / 2-5

152. தேவவார்த்தைகளைக் கற்றுக் கொள்வதோடு நிறுத்தாதே. தேவ சித்தம் செய்ய ஒப்புக் கொடு - யாக் 1 / 22,23

153. பொல்லாதவர்களோடே ஐக்கியம் வைக்காதே. நல்லவர்களோடே ஐக்கியம் வைத்திடு - சங் 1 / 1

154. கர்த்தருக்குள் ஒரே மனமுள்ள புருஷனும் மனைவியுமாயிருந்தால் அது வெற்றியுள்ள திருமண வாழ்க்கை - பிர 4 / 9

155. படித்தவைகளை பயன்படுத்தப் படிக்க வேண்டும் - மத் 25 / 21

156. கடவுள் நமக்குத் தந்த உணவு, உடை, உறைவிடம், உற்றார், உறவினர், உபகரணம், உற்சாகம் யாவுக்கும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும் - I தெச 5 / 18

157. ஆண்டவர் எனக்கு என்ன செய்தார் என்று முறுமுறுக்காதே. நீ ஆண்டவருக்காக என்ன செய்தாய் என்று யோசி - I கொரி 10 / 10

158. நீ உன் வீட்டுக்கு என்ன செய்தாய்? நீ உன் நாட்டுக்கு என்ன செய்தாய்? நீ திக்கற்றோர்க்கு என்ன செய்தாய்? நீ உன் ஆண்டவருக்கு என்ன செய்தாய்? - யாக் 1 / 27

159. இயேசுவின் கொள்கைகளின்படி வாழ்பவர்கள் எதிர்காற்றுகள் வந்தாலும் விழுந்து போவதில்லை - மத் 7 / 24, 25

160. தீமை செய்பவனை மட்டும் பார்க்கக் கூடாது. தீமையின் பின்னணியையும் பார்க்க வேண்டும் - சங் 94 / 20

161. எப்பொழுது விழுவீர்கள் என்று உங்கள் சத்துருக்கள் காத்திருக்கிறார்கள். விழாதபடிக்கு கர்த்தரின் சமுகத்தில் காத்திருங்கள் - யூதா 24

162. வீடு என்னும் உலகத்தை விட்டு உலகம் என்னும் வீட்டுக்குள் வர வேண்டும். அன்பில் வளர வேண்டும் - I பேதுரு 1 / 22

163. ஒருவரிடமும் சொல்லாதே என்று உன்னிடம் ஒருவர் சொன்ன இரகசியத்தை ஒருவரிடமும் சொல்லாதே - நீதி 25 / 9

164. கர்த்தர் இயேசுவை நேசிக்காதவர்களுக்கு இளைப்பாறுதலுமில்லை; இன்பமுமில்லை - மத் 11 / 28

165. ஏழையிடத்தில் அதிக கூலி வாங்கினாலும் கொள்ளைதான். பணக்காரனிடத்தில் அதிக கூலி வாங்கினாலும் கொள்ளைதான் - மத் 20 / 4,7

166. அதிகமான கூலி வாங்குவது, வேலைக்கு மிஞ்சி கூலி வாங்குவது, வேலை செய்யாமல் கூலி வாங்குவது போன்றவைகள் வேலையாள் செய்யும் பாவம் - யாக் 5 / 4, II பேதுரு 2 / 15

167. கூலியை அதிகமாகக் குறைத்துக் கொடுப்பது, கூலியே கொடுக்காமல் விடுவது, கூலியைக் கொடுக்காமல் அலைப்பது எஜமானர்கள் செய்யும் பாவம் - யாக் 5 / 4

168. மூளையை நல்ல எண்ணங்களால் நிரப்ப வேண்டும். ஜெபிப்பவனாக மாற வேண்டும் - பி 4 / 8

169. மூளையை சில பயிற்சிகளால் சிந்தனையே இல்லாமலாக்கும் போது பொல்லா ஆவிகள் உள்ளே வர வாய்ப்புண்டு - மத் 12 / 43-45

170. நல்ல சிந்தைகளால் மூளையை நிரப்பினால் நல்ல வார்த்தைகள் வாயில் வரும் - மத் 12 / 34

171. கர்த்தரின் அருளை நாடி நாடி தேடித் தேடி கடலாம் வாழ்க்கைப் பயணத்தில் செல்ல வேண்டும் - சங் 147 / 11

172. ஒரு பாலர் மறு பாலரிடம் பழகும் விதத்தில் கவனம் தேவை ; ஒழுக்கம் தேவை - கலா 5 / 19

173. பகல் தூங்கும் நேரமல்ல. இரவே தூங்கும் நேரமாகும் - I தெச 5 / 7

174. கட்டிலே சொந்தமென்று சோம்பலாய் இருப்பீர்களானால் கட்டில்கிடையாகிப் போகும் சூழ்நிலை வரும் - நீதி 6 / 9-11

175. இரவில் 12 முதல் காலை 5 மணிக்கிடையில் 1 மணி நேரமாவது விழித்திருந்து ஜெபித்தால் கூடாதவைகளும் கைகூடும் - ஏசாயா 62 / 6

176. சிந்தனை, சொல், செயல், நடை, உடை, பாவனை, பழகும் விதம், இருப்பிடம், ஆவி, ஆத்மா, சரீரம், மனசாட்சி 12லும் சுத்தம் வேண்டும் - I பேதுரு 1 / 15,16

177. கூலிக்காக நன்மை செய்வதற்கும், நன்மைக்காக நன்மை செய்வதற்கும் வித்தியாசம் உண்டு - மல்கியா 2 / 10

178. கூலியையே நாடி நன்மை செய்பவன் கூலி குறைந்து விட்டால் நன்மை செய்வதையே விட்டு விடுவான் - மல்கியா 2 / 10

179. செல்வப்பெருக்கில் உள்ளவர்கள் தரித்திரத்தில் உள்ளவர்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும் - நீதி 19 / 17

180. கடவுள் திறந்த வாசல் திறந்து வைக்கும் போது செய்ய வேண்டிய நற்கிரியைகளை அவர் உதவியால் செய்திடு - எபேசி 2 / 10

181. முள்செடிகளை ஆரம்பத்திலே பிடுங்காவிட்டால் பின்பு கஷ்டம். அதைப் போல் நம் வாழ்வில் வருகின்ற முள் போன்ற பாவங்களை ஆரம்பத்திலே பிடுங்க வேண்டும் - எபி 6 / 8

182. நேரத்தைத் திட்டமிட்டு செலவு பண்ணு - எபேசி 5 / 16

183. பணத்தைத் திட்டமிட்டு செலவு பண்ணு - மத் 25 / 27

184. பெலத்தைத் திட்டமிட்டு செலவு பண்ணு - நீதி 31 / 3

185. எந்த நன்மை செய்தாலும் (சேவை, தர்மம், நற்கிரியை) படாடோபமின்றி வலக்கை செய்வதை இடக்கை அறியாதபடி செய்ய வேண்டும். - மத் 6 / 2-4

186. உலகத்தில் உள்ள மக்கள் மாறுவது போல் எல்லாம் நாம் மாற வேண்டும் என்று அவசியமில்லை. பாவமுண்டா? அத்தியாவசியமா? என்பதை சோதிக்க வேண்டும் - I தெச 5 / 21,22

187. எதிலும் ஆடம்பரத்துக்கு இடம் கொடாமல் எதிலும் எளிமைக்கு இடம் கொடு - மத் 5 / 3

188. கொடுங்கோலாசனங்களை உலகமெங்கும் கட்டி, பூட்டி ஜெபிக்க வேண்டும் - சங் 95 / 20

189. ஒவ்வொரு மணிக்கும் முக்கியத்துவம் கொடு. கர்த்தர் தந்த காலம் என்னும் முத்தைப் பாழாக்காதே - எபே 5 / 17

190. உன் அழகு, உன் திறமை, உன் பதவி, உன் பட்டம், உன் பொருள், நீ செய்யும் நன்மை யாவும் கர்த்தரால் வந்தது என்பதை உணர்ந்து பெருமை பாராட்டாதே - எரேமியா 10 / 23

191. வயது ஏற ஏற அழகு மறையும். எனவே அழிந்து போகப் போகிற அதைக் குறித்துப் பெருமை பாராட்டாதே - எரே 9 / 23,24

192. இயற்கையை ஆராய ஆராய கர்த்தரின் மகிமையையும் புரிய முடியும் - சங் 19 / 1, 2

193. கர்த்தர் படைத்த மற்ற யாவும் புதிய காரியங்களைச் செய்வதில்லை. புதிய காரியங்கள் செய்ய ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே கொடுக்கிறார் - ஆதி 2 / 19

194. நல்ல சம்பாத்தியத்தால் நன்மைகள் உண்டாகும். கள்ள சம்பாத்தியத்தால் தீமையே உண்டாகும் - சங் 128 / 2

195. கூட்டல் கணக்கில், பெருக்கல் கணக்கில், ஸ்குயர் கணக்கில் கர்த்தர் நம்மை நாளுக்கு நாள் ஆசீர்வதிக்க முடியும் - ஆதி 22 / 17

196. கழித்தல் கணக்கில், வகுத்தல் கணக்கில் நாளுக்கு நாள் கர்த்தர் நம்மைச் சபிக்கவும் முடியும் - உபா 28 / 15

197. லீ புஷ்பத்தின் மேல் முட்கள் படப்பட மணம் வீசுவது போல் சோதிக்கப்பட்டாலும் நல்மணம் வீச வேண்டும் - உன் 2 / 2

198. மண்ணையே பார்ப்பவன் விண்ணையே பார்ப்பானாகில் கடவுள் இல்லை என்று சொல்வதை விட்டுவிடுவான் - கொலோ 3 / 1, 2

199. நன்றாகச் செய்ய மனமுள்ளவனாகி நன்றாகச் செய்யச் செய்ய கடவுள் இன்னும் நன்றாகச் செய்ய உதவுவார் - லூக் 16 / 10

200. அன்பும் வேண்டும் ; அன்பைக் காட்டவும் வேண்டும் ; அன்பினால் நன்மை செய்யவும் வேண்டும் - I கொரி 13

201. நம்முடைய தவறுகளையும் குற்றங்களையும் கண்டும் காணாமல் வாழக்கூடாது - செப்பனியா 2 / 2

202. பொருள் போனாலும் பயப்படாதே. அருள் நாதர் அருளைப் பற்று. இரட்டிப்பாய் தந்திடுவார் உனக்கு - சகரியா 9 / 12

203. எறும்பு பேசாதிருந்தும் தன் செயல்களால் போதிக்கிறது. அதைப் போல் நம் போதகத்தை விட சாட்சியின் ஜீவியம் மேலானது - I பேதுரு 3 / 1, 2

204. பிறந்த எல்லாரும் மரணத்தை சந்திப்போம். ஆனால் எங்கு, எவ்வாறு, எப்போது, எங்கே, ஏன் என்பதில் வித்தியாசம் உண்டு - பிர 3 / 2

205. பக்திப்பாடலுக்கேற்ற விதத்தில் இசை இருத்தல் வேண்டும் - I கொரி 14 / 40

206. அவரவர் தொழில் திறமைக்காக ஆண்டவரிடம் மன்றாடலாம். தருவார் இயேசு - தானி 1 / 3

207. எதிராளி பொய்யான சமாதானம் பண்ணும் போது ஞானமாயிருக்க வேண்டும் - சங் 28 / 3

208. மழை பெய்யாத பொழுது குடையைக் கொடுத்து பெய்யும் பொழுது குடையை பிடுங்குவது போல் ஆபத்தில் உதவாத நண்பன் நண்பனல்ல - நீதி 27 / 10

209. கையிருப்பதைக் கொண்டு செய்ய வேண்டியதை செய். கடன் வாங்கிச் சிக்கிக் கொள்ளாதே - நீதி 22 / 7

210. காகத்தின் குரலால் காகத்தையும், குயின் குரலால் குயிலையும் அறியலாம். ஒருவரின் பேச்சிருந்து அவனை அறியலாம் - மத் 26 / 73

211. நீங்கள் மரித்த பின்னரும் நீங்கள் எழுதிய நல்ல புத்தகம் பிறருடன் பேசக் கூடியது - சங் 45 / 1

212. நல்ல நண்பன், நல்ல மனைவி, நல்ல சகோதரன், நல்ல பிள்ளைகள் ஆண்டவர் உனக்குத் தரும் ஈவுகள் - நீதி 19 / 14

213. இருட்டிருந்து சாப்பிடாதே. முகராமல் சாப்பிடாதே. சுவைக்காமல் சாப்பிடாதே. அவசர அவசரமாய் சாப்பிடாதே. ஸ்தோத்திரியாமல் சாப்பிடாதே. - I தீ 4 / 4

214. தேவனுக்குரியதைச் செலுத்தத் தவறினாலும் உன்னிடம் சாத்தானும் சத்துருக்களும் கொள்ளையடிப்பார்கள் - மத் 22 / 21

215. நீயாகப் பழி வாங்காதே. கர்த்தர் உனக்காக யுத்தம் செய்வார் - ரோமர் 12 / 19, 20

216. சில நாய்கள் குரைப்பதில்லை. ஆனால் கடிக்கும். அந்தரங்கமாக தீமை செய்வோர்க்கு விலக்கும்படி ஜெபி - நீதி 2 / 14

217. ஏமாற்றுபவன் முடிவில் ஏமாறுவான். எனவே ஒருவரையும் ஏமாற்றாதே - ஏசாயா 33 / 1

218. பிறந்த நாளைச் சொல்வார்கள். பிறந்த வருடத்தைச் சொல்ல மாட்டார்கள். என்றும் இளமையாய் இருக்க முடியுமா? - நீதி 31 / 30

219. பல துளிகள் சேர்ந்து 1 கடல். பல நொடிகள் சேர்ந்து 1 வாழ்க்கை. 1 நொடியையும் நஷ்டப்படுத்தாதே - எபே 5 / 17

220. முழுகிப் போகிறவன் காப்பாற்றும்படி வைக்கோலையும் பிடிப்பான். மூழ்கிப் போகாதபடி எப்போதும் கர்த்தரைப் பற்று - I கொரி 10 / 12

221. தனியாக பூஜ்யத்திற்கு மதிப்பில்லை. இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும் போது மதிப்பு வருகிறது. அதைப் போல் கர்த்தரோடிருந்தால் அவர் கனப்படுத்துவார் - மத் 21 / 6, 7

222. கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் கேட்பவர்க்கு பதில் தெரிந்திருக்கும் என்றுஎண்ணாதே. ஞானி போல் நடிக்கும் மூடர்கள் உண்டு - நீதி 3 / 7

223. கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் கர்த்தரே நம் பெயரைப் பிரஸ்தாபம் பண்ணுவார் - ஆதி 12 / 2

224. விருந்து வீட்டுக்குப் போனாலும் இருந்து சாப்பிட எண்ணாதே. சோம்பலாயிராதே - II தெச 3 / 8, 9